1992 செப்டம்பர் 22]

37—

விவசாய விளைபொருட்கள் விற்றவுடன் பணம் பட்டுவாடா செய்தல்.

*10978—திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாய விளைபொருட்களை விற்றவுடன் பணம் பட்டுவாடா செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரும்பாலும் அனைத்து வேளாண் விற்பனைக் கூடங்களிலும் பருத்தியைத் தவிர இதர பொருட்களுக்கு உடனடி பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. பருத்தி விற்பனை, ஆலை முதலாளிகளின் பிரதிநிதிகள் மூலம் நடைபெறுவதால் கையிருப்பு தொகைக்கு மேல் அதிகமாகத் தேவைப்படும்போது ஆலை முதலாளிகளிடமிருந்து தொகையைப் பெற்று பட்டுவாடா செய்ய சில நேரங்களிலே தாமதம் ஆகிறது. இத்தாமதத்தைத் தவிர்க்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, விவசாய விளைபொருட்களை இடையில் தரகர் இன்றியும் ஏமாற்றம் இன்றியும் விற்பனை செய்வதற்காக விவசாயிகள் போகின்ற அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பருத்தி மட்டும் அல்லாமல் நெல், பட்டுக்கூடு போன்ற பொருட்களுக்கும் அவர்கள் உடனடியாக பணம் பட்டுவாடா செய்வது இல்லை. உதாரணமாக தென்னாற்காடு மாவட்டத்திலே வேட்டவலம் என்ற ஊரில் இருக்கிற, நெல் விற்பனை செய்கின்ற, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே, ஒரு வார காலத்திற்கு மேலாக விவசாயிகளின் நெல்லுக்கு பணம் பட்டுவாடா செய்யவில்லை என்றும், கோவையில் இருக்கிற பட்டுக்கூடு விற்பனைக் கூடத்திலே ஒரு வார காலத்திற்கு மேலாக பணம் பட்டுவாடா செய்யவில்லை என்றும், அந்தந்த பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் கூறுகின்றனர். எனவே, விளை பொருட்களுக்கு தாமதம் இன்றி உடனடியாக பணத்தை பட்டுவாடா செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் இரண்டு இடங்களிலே பணம் பட்டுவாடா செய்வதற்கு கால தாமதம் இருப்பதாக கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்து இப்போது எனது கவனத்திற்கு கொண்டு வந்ததன் காரணமாக பணத்தை விரைந்து பட்டுவாடா செய்வதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. அது மட்டும் அல்லாது விற்பனைக் கூட பொது நிதியிலிருந்து பணத்தை பட்டுவாடா செய்வதற்கு 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் சட்டத்திலே இடம் இல்லை. ஆனால், எங்கள் எண்ணத்திலே என்றென்றும் நிறைந்து இருக்கிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய புனித அரசு பொறுப்பு ஏற்றபின் உடனடியாக வேளாண் விளைபொருட்களுக்கு பணத்தை பட்டுவாடா செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு வல்லுநர் குழுவை அமைத்து அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்களுடைய துறையைப் பணித்து இருக்கிறார்கள். எங்களுடைய பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை தங்களின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை அரசு கொள்முதல் செய்யும் போது அதற்கு காலத்திலே பணத்தை பட்டுவாடா செய்வது கிடையாது. 6,7 மாதங்கள் ஆகின்றன. உதாரணத்திற்காக ஒன்று சொன்னால் திருக்குவளையில் அ.இ.அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர் சமீபத்திலே இறந்து விட்டார்கள். அவருடைய குடும்பத்தினரிடமிருந்து நெல்லை ஏறத்தாழ 30 ஆயிரம் ரூபாய்க்கு அரசு கொள்முதல் செய்தது. இன்று வரையில் அந்தப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. அவர்கள் வங்கியிலே கடன் வாங்கி சாகுபடி செய்ய வேண்டியிருக்கிறது. வங்கிக்கு கடன் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, இது போன்ற காலதாமதத்தைத் தவிர்த்து அந்தத் தொகையை வட்டியோடு சேர்த்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையின் கீழ் பணியாற்றுவது ஒழுங்குமுறை விற்பனைக்கூடம். அவர் எது என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்க வேண்டும். அவர் குறிப்பிட்டு சொல்லியிருப்பது நுகர் பொருள் வாணிபக் கழகத்திலே இருப்பது. எனவே அவர் தனியாக கேள்வி போட்டால், அதற்குறிய அமைச்சர் அவர்கள் பதிலை அளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 செப்டம்பர் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண். 38, திருமதி ஜீனத் சர்புதீன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

38—

குடிசை மக்களுக்கு அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டுதல்.

*9023—திருமதி ஜீனத் சர்புதீன் ;

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேப்பாக்கம் தொகுதியில் பழைய 93/புதிய 83 வட்டத்தில் இருக்கும் எல். ஜி. என். ரோட்டில் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு அடுக்குமாடிக் கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஜீனத் சர்புதீன் ; மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரப் புகழ் பெற்ற மதுரை மாநகரில் மாநாடு கண்ட மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் இப்படி இல்லை என்று சொல்லி விட்டால் எப்படி? வரும் ஆண்டிலாவது என்னுடைய தொகுதியில் வாழும் ஏழை மக்களுக்கு அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டித் தரப்படும் என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற பகுதி எல். ஜி. என். சாலையில் உள்ள கோவிந்ததாஸ் நகரப் பகுதியாகும். சுமார் 300 குடும்பங்களுக்கு மேலாக இங்கு குடிசைகளிலே வசித்து வருகிறார்கள். குடிசைப் பகுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த நிலம் தனியாருக்கு சொந்தமான நிலம். மொத்தம் 15 மனைகள் இதிலே அடங்கி இருக்கின்றன. அந்த நிலத்திற்கு சொந்தக்காரர் ஆகிய தனியார் அந்த நிலத்தை குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைக்க மறுக்கின்ற காரணத்தினாலும் அவர்